# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2024

## வளர்தமிழ் 12

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. புறத்துறையில் வீரம் பற்றிக் கூறும் இலக்கியங்களில் ஒன்று

அ) குறுந்தொகை ☐ ஆ) கலிங்கத்துப்பரணி ☐

இ) அகநானூறு ☐ ஈ ) திரிகடுகம் ☐

2. மிகமகிழ்தல் என்ற கருத்தை உணர்த்தும் மரபுத்தொடர்

அ) கைவிரித்தல் ☐ ஆ) உச்சிகுளிருதல் ☐

இ) துறைபோதல் ☐ ஈ ) ஆறப்போடுதல் ☐

3. தேவநேயப்பாவாணர் உலகின் முதன்மொழி தமிழ் என்று ——— நூற்றாண்டில் நிறுவினார்.

அ) 19 ஆம் ☐ ஆ) 18ஆம் ☐

இ) 20ஆம் ☐ ஈ ) 17 ஆம் ☐

4. பின்வருவனவற்றுள் வியங்கோள் விகுதி

அ) அன் ☐ ஆ) அர் ☐

இ) அ ☐ ஈ ) க ☐

5. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள குற்றெழுத்துகள்

அ) 18 ☐ ஆ) 95 ☐

இ) 100 ☐ ஈ ) 216 ☐

6. நீர்ப்பொருள் சுருங்காது என்று பாக்சர் கூறுவதற்கு முன்பே கூறியவர்

அ) பாரதியார் ☐ ஆ) இடைக்காடர் ☐

இ) ஔவையார் ☐ ஈ ) கபிலர் ☐

7. மாவீரர் நாளன்று ஒலிக்கப்படும் பாடலான "மொழியாகி எங்கள் மூச்சாகி" என்ற பாடலை எமக்களித்தவர்

அ) சாந்தன் ☐ ஆ) புதுவை இரத்தினதுரை ☐

இ) காசி ஆனந்தன் ☐ ஈ) கண்ணதாசன் ☐

8. "செம்புலப் பெயல்நீர் போல" இதில் பெயல் என்பது

அ) மழை ☐ ஆ) காற்று ☐

இ) புயல் ☐ ஈ) நெருப்பு ☐

9. இலங்கையில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்ட இடங்களில் ஒன்று

அ) நெடுந்தீவு ☐ ஆ) கிளிநொச்சி ☐

இ) மாந்தை ☐ ஈ) நல்லூர் ☐

10. நெடியோன் என்பது

அ) தெரிநிலைவினை ☐ ஆ) குறிப்புவினை ☐

இ) வியங்கோள்வினை ☐ ஈ) எதிர்மறைவினை ☐

11. சுப்பிரமணியர் என்ற வடசொல்லின் தூயதமிழ்ச்சொல்

அ) திருமால் ☐ ஆ) சிவன் ☐

இ) முருகன் ☐ ஈ) அழகர் ☐

12. மொழித்தூய்மை செய்வதற்குக் கடும் முயற்சிகள் எடுத்த தமிழ்ச் சான்றோரில் ஒருவர்

அ) மறைமலையடிகள் ☐ ஆ) ஈ.வே.இராமசாமி ☐

இ) தனிநாயகம்அடிகள் ☐ ஈ) க.மு.செல்லப்பா ☐

13. காடு வெட்டினான். இச்சொற்றொடர்

அ) வினைத்தொகை ☐ ஆ) உம்மைத்தொகை ☐

இ) அன்மொழித்தொகை ☐ ஈ) வேற்றுமைத்தொகை ☐

14. குற்றியலுகர எழுத்து அல்லாதது

அ) சு ☐ ஆ) து ☐

இ) பு ☐ ஈ) ரு ☐

15. செய்வித்தேன் என்ற பிறவினையின் தன்வினை

அ) செய் ☐ ஆ) செய்தேன் ☐

இ) செய்வர் ☐ ஈ) செய்யும் ☐

16. நற்றமிழில் பெயர் சூட்டாமல் இருப்பதும் ஓர் இனவழிப்புச்செயல் என்று கூறிய கவிஞன்

அ) மன்னார் அமுதன் ☐ ஆ) தாமரைக்கண்ணன் ☐

இ) இரவி ☐ ஈ) உதயை வீரையன் ☐

17. "நந்தும் முரளும் ஈரறிவினவே" இதில் முரள் என்பது

அ) எறும்பு ☐ ஆ) நத்தை ☐

இ) கறையான் ☐ ஈ) சிப்பி ☐

18. ஒருவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் துணையாய் நிற்பது

அ) ஒழுக்கம் ☐ ஆ) கல்வி ☐

இ) செல்வம் ☐ ஈ) பணம் ☐

19. காலவாகுபெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) தோகை விரித்தது. ☐

ஆ) அவியல் உண்டாள். ☐

இ) நாலுமணி பூத்தது. ☐

ஈ) உலகம் பார்த்தது. ☐

20. கையேடு என்பது

அ) உயிர்முன்மெய் ☐ ஆ) உயிர்முன்உயிர் ☐

இ) மெய்முன்மெய் ☐ ஈ) மெய்முன்உயிர் ☐

21. ஓடினோம் என்ற வினைமுற்றைப் படர்க்கைப் பன்மைக்கு மாற்றினால்

அ) ஓடுவான் ☐ ஆ) ஓடியது ☐

இ) ஓடினார்கள் ☐ ஈ) ஓடினீர்கள் ☐

22. ‘கோளொத்த சிறைவைத்தாண்ட கொற்றவன்’

அ) இராவணன் ☐ ஆ) இராமன் ☐

இ) சங்கிலியன் ☐ ஈ) குமணன் ☐

23. பின்வருவனவற்றுள் பெயர்ப்பகாச்சொல்

அ) வலைஞன் ☐ ஆ) கட்டினான் ☐

இ) மழை ☐ ஈ) தமிழர் ☐

24. தமிழர் வாழ்ந்த ________ என்னும் ஊர் கல்லோயா எனச் சிங்களத்தில் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

அ) பட்டிப்பளை ☐ ஆ) அம்பாறை ☐

இ) அனுராதபுரம் ☐ ஈ) காலி ☐

25. தளிர் அன்ன கை என்ற உவமைஅணியின் உவமேயம்

அ) கை  ஆ) தளிர்
இ) அன்ன  ஈ) மென்மை

26. பனைமரங்களிலிருந்து எமக்குப் பல பயன்கள் கிடைக்கின்றன என ஆசிரியர் கூறினார். இச்சொல்லியம்

அ) வியப்புச்சொல்லியம்  ஆ) கூட்டுச்சொல்லியம்
இ) கலப்புச்சொல்லியம்  ஈ) தொடர்ச்சொல்லியம்

27. புறப்புண் நாணி வாளுடன் வடக்கிருந்து உயிர் நீத்த மன்னன்

அ) பெருஞ்சேரலாதன்  ஆ) நெடுஞ்செழியன்
இ) முதுகுடுமிப்பெருவழுதி  ஈ) கரிகாற்சோழன்

28. பொற்காப்பு என்ற சொல்லைப் பிரித்து எழுதினால்

அ) பொட் + காப்பு  ஆ) பொன் + காப்பு
இ) பொண் + காப்பு  ஈ) பொற் + காப்பு

29. 'உடைய' என்ற சொல்லுருபு உணர்த்துவது

அ) மூன்றாம் வேற்றுமையை  ஆ) ஏழாம் வேற்றுமையை
இ) ஆறாம் வேற்றுமையை  ஈ) ஐந்தாம் வேற்றுமையை

30. எ, யா, ஆ, ஓ, ஏ, என்பன

அ) குற்றெழுத்துகள்  ஆ) நெட்டெழுத்துகள்
இ) சுட்டெழுத்துகள்  ஈ) வினாவெழுத்துகள்

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

கால்டுவெல் என்னும் வெளிநாட்டவர் மறைமலையடிகளுக்கு முன் தனித்தமிழ்க் கொள்கைக்கு அரண்சேர்க்கும் வகையில் மொழியியல் ஆராய்ச்சி செய்தார். கி.பி 1838இல் திருநெல்வேலிக்கு வந்த அவர் 50 ஆண்டுகாலம் அங்கு தங்கி கிறித்தவ சமயப்பணி ஆற்றினார். அவர் தமிழ்மொழியை வடமொழியுடனும் தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற திராவிடமொழிகளுடனும் ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்தார். அந்நேரத்தில் தமிழ்மொழி, வடமொழியின் துணை இல்லாமல் இயங்க இயலாது என்ற நம்பிக்கை வேரூன்றியிருந்தது. ஆனால், கால்டுவெல்லின் ஆராய்ச்சி பல உண்மைகளை வெளிப்படுத்தியது. வடமொழிக் குடும்பத்திலிருந்து தமிழ் வேறுபட்டது. தமிழ் திராவிட மொழிக் குடும்பத்தின் தாய்மொழி. அதிலிருந்தே தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற பல மொழிகள் தோன்றின என்பதை அவர் கண்டறிந்து 'திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் நூலை எழுதினார் . மனோன்மணியம் சுந்தரனாரும் அத்தகையதொரு மொழியியல் கருத்தைத் தாம் இயற்றிய மனோன்மணியம் நாடகநூலின் தமிழ்த்தெய்வ வணக்கப் பாடலில் கூறியிருந்தார். அதில் "கன்னடம், களிதெலுங்கு, மலையாளம், துளு ஆகிய மொழிகள் தமிழ் என்னும் ஒரே வயிற்றில் தோன்றிய மொழிகள்" என்று கூறினார். "வடமொழி அழிந்து போன மொழி என்றும் தமிழ் என்றும் இளமையாக வாழும்மொழி" என்றும் பாடிய அவர் கருத்தும் மறைமலையடிகளுக்கு முன்னோடிக் கருத்துகளாக இருந்தன.

1. மறைமலையடிகளுக்கு முன் மொழியியல் ஆராய்ச்சி செய்தவர் யார்?

2. திராவிடமொழிக் குடும்பத்தின் தாய்மொழி எது?

3. கால்டுவெல் எழுதிய நூலின் பெயர் என்ன?

4. தமிழ் என்னும் ஒரே வயிற்றில் இருந்து தோன்றிய மொழிகள் எவை?

5. கால்டுவெல்லின் ஆராய்ச்சி எவ்வுண்மைகளை வெளிப்படுத்தியது?

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. எழுத்தாணி ஏந்தும் ஈசர்கள் என மன்னார் அமுதன் குறிப்பிடுவது யாரை ?

___

2. தேவாரகாலத்தில் தமிழுக்காகக் கடும் பரப்புரை செய்தவர்கள் யாவர்?

___

___

3. ஐயறிவினை உடையவை எவை?

___

___

4. கள்ளிச்செடிக்குப் பாலை என்ற பெயர் வரக் கரணியம் யாது?

___

5. ஊர்காண் காதையில் தென்றலின் இனிமையைக் கூறியவர் யார்?

___

6. பழந்தமிழர்களுடைய இயற்கை வாழ்விலே உழைப்பொழிந்த காலம் எது?

___

7. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்

என்றும் இடும்பை தரும். என்ற குறளின் பொருளை எழுதுக.


___

___

புள்ளிகள் 10

**4) பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

1



2. **காற்றே நீ மெல்ல வீசு - எம்**
**காவலர் பெருமை சொல்லி வீசு**

___

___

___

___

___

___

___

___

___

___

___

புள்ளிகள் 10

## 5) அ) பந்தியை வாசித்து, இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

வன்னிப் பெருநிலம் அடர்ந்த காடுகள் நிறைந்து காணப்படுகின்றது. அவற்றுள் ஆங்காங்கே சிறுசிறு குடியிருப்புகள். குடிமனைக்கு அருகே சின்னஞ்சிறிய ஏரிகள், குளங்கள் காணப்படுகின்றன. அங்கே பசுமையான நெல் வயல்கள் காட்சியளிக்கின்றன. அவற்றைச் சுற்றி வண்டுகள் பறக்கின்றன. ஏரியின் கரையோரங்களில் நீர்ப்பறவைகளின் பண்ணொலி கேட்கின்றது. அருகே சிறுவர்கள் ஆடிப்பாடி மகிழ்கின்றனர். ஏரிகளில் தாமரை அல்லி மலர்ந்து நிறைந்திருக்கின்றன. வயலோரங்களில் தென்னைமரங்களும் கமுகமரங்களும் வரிசைவரிசையாக நிற்கின்றன.

1. பொதுமொழிக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

2. காரணச்சிறப்புப்பெயர் ஒன்று எழுதுக.

_______________________________________________

3. அடுக்கிடுக்குத்தொடருக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

4. ஏழாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்லியம் ஒன்று எழுதுக.

_______________________________________________

5. உம்மைத்தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

6. பெருநிலம், பண்ணொலி என்பவற்றைப் பிரித்து எழுதுக.

_______________________________________________

7. வண்டு என்பது எவ்வகைக் குற்றியலுகரம்?

_______________________________________________

8. உயர்திணை நிகழ்காலப்பன்மை வினைச்சொல் ஒன்று தருக.

_______________________________________________

9. கேட்கின்றது என்ற வினைச்சொல்லைப் பகுத்து எழுதுக.

_______________________________________________

10. சிறப்புப்பெயரோடு பொதுப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

புள்ளிகள் 10

ஆ) 1. வேற்றுமைத்தொகை என்றால் என்ன?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 02

2. பின்வருவனவற்றிற்கு ஒவ்வொரு எடுத்துக்காட்டுத் தருக.

1. கெடுதல்புணர்ச்சி _______________________

2. எதிர்மறை வினையெச்சம் _______________________

3. பால்வழு _______________________

புள்ளிகள் 03

**6) தரப்பட்டுள்ள சொற்குவியலில் இருந்து கருத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுக.**

பதறாத ஆடு அளந்து அழுகிறது

பொதி நாமொன்று போடு காரியம் போட்டாலும்

துள்ளின நனைகிறதென்று சுமக்கும்

நினைக்கும் மாடு சிதறாது நினைக்க ஒன்று

ஆற்றில் தெய்வம் ஓநாய்

1. எந்தச் செயலையும் அளந்து செய்.

_______________________________________________

2. ஏமாற்றி அழிக்குஞ் செயல்.

_______________________________________________

3. நாம் நினைப்பது எல்லாம் நடப்பதில்லை.

_______________________________________________

4. உறுதிச் செயல் நிறைவு பெறும்.

_______________________________________________

5. அடக்கம் இன்மை துன்பம் தரும்.

_______________________________________________

புள்ளிகள் 05

## 7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

செய்தித்தாள்கள் செய்திகளையும் தகவல்களையும் படங்களுடன் தருகின்றன. செய்தித்தாள்களில் செய்திகளைத் தவிர கட்டுரைகள், கவிதைகள், கதைகள் போன்றவையும் இடம்பெறுகின்றன. சிறுவர்களுக்கான தனிப்பகுதிகளும் செய்தித்தாள்களில் காணப்படுகின்றன. உடனுக்குடன் தகவல்களை அறிந்து கொள்ளச் செய்தித்தாள்கள் உதவுகின்றன. மாணவர்களாகிய நாம் செய்தித்தாள்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 5

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ ஈழத்தமிழரும் ஏதிலி வாழ்வும்
- ✸ பண்டைத் தமிழ் இலக்கியங்களில் அறிவியல்
- ✸ நாமும் அறிவியல் வளர்ச்சியும்
- ✸ நான் ஒரு தமிழ் ஆசிரியரானால்

புள்ளிகள் 15